## வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடைகள் வியாபார கம்பனி – 2020/2021

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடைகள் வியாபார கம்பனியின் 2021 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபநட்டக் கூற்று மற்றும் ஏனைய விபரமான வருமான கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக நான் அபிப்பிராயம் ஒன்றை தெரிவிக்கவில்லை.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல், அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், அபிப்பிராயத்தை மறுப்பதற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான ஒரு அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதுள்ளேன்.

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்கீட்டு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | குறிப்பிட்ட நியமத்தின் தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் 57 ஆவது பந்தியின் பிரகாரம், 2021 மார்ச் 31 ஆம் திகதியில் காணப்பட்ட ரூபா 8,680,365 ஆன இளைப்பாற்று பலன்களின் நன்மை பொறுப்புக்கான ஆய்வுக் கால மதிப்பீடு செய்யப்படாமையால் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியவில்லை. | அதை எதிர்காலத்தில் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் பிரகாரம், இளைப்பாற்று பலன்களின் நன்மை பொறுப்பை கணக்கிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இன் 26 (அ) பந்தியின் பிரகாரம் கம்பனி, தேசிய கால்நடைகள் அபிவிருத்தி அதிகார சபையின் சார்ந்த கம்பனி ஒன்றாக இருந்த போதிலும் அதிகார சபையுடன் மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுக்கல் வாங்கல் தொடர்பாக வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | இந்த வெளிப்படுத்தல்களை பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் எதிர்வரும் கணக்கீட்டு வருடங்களில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இன் பிரகாரம் உரிய நிறுவனத்தின் சார்ந்த கம்பெனி ஒன்றாக இருந்த போது அது தொடர்பான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 41 இன் 04 ஆவது பந்தியின் பிரகாரம் ரூபா 1,839,935 பெறுமதியான பன்றிகளின் பெறுமதிக்கு 2021 மார்ச் 31 ஆம் பகுதியில் ஆம் திகதியில் உயிரியல் விஞ்ஞான சொத்துக்களாக அடையாளப்படுத்தப்பட்டு நிதி கூற்றுகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த பெறுமதி இருப்பு மீதியின் கீழ் கட்டப்பட்டிருந்தது. | அதை எதிர்காலத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | இலங்கை கணக்கீட்டு நியமம் 41 இன் பிரகாரம், உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் சரியாக நிதி கூற்றுகளில் காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இலங்கை நிதி அறிக்கை படுத்தல் நியமம் 09 இன் 5.5.15 பந்தியின் பிரகாரம் வியாபார கிடைக்கப் பெற வேண்டியவைகளை கணக்கிடும் போது கடந்த கால அளவீட்டுக்கான எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்ட முறை (Expected Credit Loss Method) பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், கம்பெனியினால் 2021 ஆம் மார்ச் 31 திகதியில் கம்பெனியின் வியாபார கிடைக்கப் பெற வேண்டியவைகளின் மீதியான ரூபா 3,262,651 ஆன பெறுமதி அதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கணக்கிடப் பட்டில்லாததன் காரணமாக குறித்த பெறுமதியின் உண்மை தன்மையை கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை. | இந்த முறைமையினை எதிர்காலத்திலே பின்பற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை நிதி அறிக்கை படுத்தல் நியமம் 09 இன் பிரகாரம் கடந்த கால அளவிடுதலுக்காக எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்ட முறையின் பிரகாரம் ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 மார்ச் 31 ஆம் திகதியில் நிதி கூற்றின் பிரகாரம் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் மொத்த கிரயம் ரூபா 116,006,884 ஆக காணப்பட்ட போதிலும், அத்திகதியில் பேரேட்டின் பிரகாரம் மீதி ரூபா 116,558,114 ஆக காணப்பட்டதனால் ரூபா 551,230 வேறுபாடு ஒணறு காணப்பட்டது. | நிறைவு செய்யப்பட்டுள்ள கட்டிடத்தின் பெறுமதி அதனுள் புதிதாக உள்ளடக்கப்பட்டதனால் இந்த பெறுமதி அதிகரிப்புக்கு காரணமாகிறது. | வேறுபாட்டை அடையாளப்படுத்தி சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | காசு பாய்ச்சல் கூற்றின் சீராக்கங்களின் கீழ் முதலீட்டின் அடிப்படையிலான வட்டி வருமானம் ரூபா 1,740,674 மாத்திரம் சீராக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும், கம்பெனியினாள் ரூபா 3,376,341 சீராக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இதை சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சரியாக கணக்கிடுதலுக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | நிதி கூற்றின் பிரகாரம் நிலையான வைப்பு மீதி ரூபா 19,844,721 ஆக காணப்பட்ட போதிலும் நிலையான வைப்பினை புதுப்பிக்கும் அறிவித்தலின் பிரகாரம், கணக்கிடப்பட்ட வைப்பின் மீதி ரூபா 20,004,566 ஆக காணப்பட்டதால் ரூபா 159,845 வேறுபாடு ஒன்று காணப்பட்டது. | நிலையான வைப்பு மீதி கணக்கிடப்பட்டிருப்பது நிலையான வைப்பின் காலாவதியாகும் தினத்தில் ஆகும். | நிலையான வைப்பு மீதி ஐந்தொகை திகதியின் கணக்கிட்டு கணக்கினுள் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நிதிக் கூற்றுக்களின் காட்டப்பட்டுள்ள ரூபா 366,008 ஆன கால்நடைகள் மற்றும் ஏனைய உணவுகளும் ரூபா 19,026,022 ஆக உள்ள இனப்பெருக்க கால்நடைகள் 13,960 இல் கால்நடைகளில் 6566 கால்நடைகளும் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன் ரூபா 3,484,254 ஆன முட்டைகள் இருப்புக்காக மெய்மையாய்வு அறிக்கையும் கணக்காய்க்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக அந்த இருப்புக்களின் போக்கு மற்றும் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை. | அந்த கணக்குகளை கணக்கிடும் போது ஒவ்வொரு தொகுதிக்கு இணங்க வெவ்வேறாக கணக்கிடப்பட்டுள்ளது. அந்த கணக்குகளின் சரியான தன்மை 100% ஆகும். | இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் மீதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது. பௌதீக இருப்பு மெய்மையாய்வு சரியாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2021 மார்ச் 31 ஆம் திகதியில் ஏனைய கிடைக்கப் பெறவேண்டிய வற்றின் பெறுமதி ரூபா 64,592,694 ஆக காணப்பட்டதுடன் அதில் ரூபா 64,316,040 ஆனது பல வருடங்களில் இருந்து காணப்பட்டு வருகின்ற மீதிகள் ஆகும். 2021 மார்ச் 31 ஆம் திகதி யிலும் அந்த மீதிகளுக்குரிய எழுத்து மூலமாக சான்றுகளும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாததனால் உரிய மீதிகளின் உண்மை தன்மையை கணக்காய்வின் போது உறுதிப் படுத்துக்கொள்ள முடியாது போனது. மேலும் இந்த மீதிகள் தொடர்பாக நிதிக் கூற்றுகளில் ஐயக் கடனுக்காக போதுமான அளவு ஒதுக்கங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அதை எதிர்காலத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை கடன் மீதிகளை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும், வியாபார செலுத்தப்பட வேண்டியவைகளின் காலப்பகுப்பாய் வொன்று, கொடுக்கல் வாங்கல்களின் தன்னை என்பன தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.5.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்.**

| | விடயம் | மீதிக்கூற்றுக்கள் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | சாதாரண இருப்பு பெறுமதிகள் | 5,130,506 | 4,149,177 | 981,329 | இந்த வேறுபாடு முன்னைய கணக்கீட்டு வருடங்களிலிருந்து தொடர்ந்து காணப்பட்டு வருகின்ற மீதி என்பதுடன் இந்த வேறுபாட்டுக்கு காரணத்தை கண்டறிய முடியவில்லை. | வேறுபாட்டை அறிந்து சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பனிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து அதன் போது எடுக்கப்படும் தீர்மானங்களின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | |
| (ஆ) | கலப்பு உணவு இருப்புகள் | 124,946 | 218,761 | 93,815 | இந்த கலப்பு உணவு இருப்புகளும் தொடர்ந்து எங்களுடைய கணக்குகளில் காணப்பட்டு வருகின்ற ஒன்றாகும். பனிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து அதன் போது எடுக்கப்படும் தீர்மானங்களின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வேறுபாட்டை அறிந்து சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.4 தொடர்ந்தியங்கும் தன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கரத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 220 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியின் தேறிய சொத்துக்கள் அந்த கம்பெனியின் வெளியீட்டு மூலதனத்தின் அரைவாசியை விட குறைவாக காணப்படும் சந்தர்ப்பத்தில் கம்பெனிக்கு தாங்கிக் கொள்வதற்கு உள்ள நட்டங்களின் தன்மை மற்றும் அளவு, தாங்கிக் கொள்ளவதற்கு உள்ள நட்டத்துக்கான காரணங்கள் மற்றும் காரணம், அவ்வாறான நட்டம் மேலும் ஏற்படுவதை தவிர்த்துக் கொள்வதற்காக பணிப்பாளர் சபையினால் எவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பின் அது தொடர்பாக பங்குதாரர்களுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு அந்த அறிக்கையுடன் கம்பெனியின் பங்குதாரர்களின் அதி விஷேட பொதுக் கூட்டம் ஒன்று பணிப்பாளர் சபையினால் கூட்டப்பட வேண்டும். அவ்வாறு இருந்த போதிலும் 2021 மார்ச் 31 ஆம் திகதியில் கம்பெனியின் வெளியிட்டு மூலதனம் ரூபா 22,965,030 மற்றும் தேறிய சொத்துக்களின் பெறுமதி மறை ரூபா 24,707,845 ஆக காணப்பட்ட போதும் கம்பெனியின் பணிப்பாளர் சபையினால் 2025 மே 20 ஆம் திகதியிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை | கருத்துக்கள் கூறப்படவில்லை. | கம்பெனியின் தொடர்ந்து இயங்குதல் தொடர்பாக நிச்சயம் அற்ற தன்மையொன்று காணப்படுவதுடன் அதற்கான முறையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பெனி சட்டத்தின் 220 பந்தியின் பிரகாரம் அதி விசேட பொதுக்கூட்டம் ஒன்றை கூட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அதன் பிரகாரம் கம்பெனியின் தொடர்ந்து இயங்குதல் தொடர்பாக நிச்சயமற்ற தன்மையொன்று காணப்படுவதை அவதானிக்க முடிந்தது.

### 1.5.5 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| | விடயம் | தொகை<br>ரூபா | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | செலுத்தப்பட வேண்டிய வருமான வரி | 27,021,012 | உப பதிவேடுகள் மற்றும் வரி அறிக்கைகள் | அந்த மீதிகளுக்குரிய தகவல்கள் எமது நிறுவனத்திடம் காணப்படவில்லை. | மீதிகளை அடையாளப்படுத்தி தீர்வு காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | பெறுமதி சேர்க்கப்பட்ட வரி | 25,607 | உப பதிவேடுகள் மற்றும் வரி அறிக்கைகள் | அந்த மீதிகளுக்குரிய தகவல்கள் எமது நிறுவனத்திடம் காணப்படவில்லை. | மீதிகளை அடையாளப்படுத்தி தீர்வு காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | பொருளியல் சேவை கட்டணம் | 158,676 | உப பதிவேடுகள் மற்றும் வரி அறிக்கைகள் | அந்த மீதிகளுக்குரிய தகவல்கள் எமது நிறுவனத்திடம் காணப்படவில்லை. | மீதிகளை அடையாளப்படுத்தி தீர்வு காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | ஐயக் கடன் ஒதுக்கங்கள் | 10,630,937 | கணக்கிடும் உப பதிவேடுகள் | அந்த ஐயக் கடன் ஒடுக்கம் தொடர்ந்து காணப்படும் மீதி ஒன்றாவதுடன் எந்த கடன் கொடுத்தோருக்கு இந்த கடன் மீதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை எனது கம்பெனியிடம் ஒரு ஆவணங்களும் காணப்படவில்லை. | கணக்கிடுதலுக்கு உரிய தகவல் முறையாக பேணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | தேசிய கால்நடைகள் வளங்கள் அபிவிருத்தி சபைக்கு செலுத்த வேண்டியவைகள் | 995,230 | மீதி உறுதிப்பாடு | இந்த மீதியும் அடிக்கடி காணப்படுகின்ற மீதி ஒன்றாக இருப்பதுடன் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து இலாப நட்ட கணக்கில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | இந்த மீதியை உறுதி செய்து கொள்வதற்கு உரிய தகவல்கள் கணக்காய்விக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | மக்கள் வங்கி சேமிப்புக் கணக்கு | 49,389 | வங்கி உறுதிப்பாட்டு சேமிப்பு கணக்கு புத்தகம் | இந்த கணக்கு தொடர்பான உரிய தகவல்களை தருமாறு கடிதம் ஒன்று அந்த | மீதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதுவரையில் அதற்கான எந்த ஒரு பதிலும் கிடைக்க பெறவில்லை | எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | பிரிக்கப்படாத பங்குகளுக்கு பெறப்பட்ட தொகை | 133,589 | பங்குச் சான்றிதழ் மற்றும் பங்குகளை விநியோகித்தல் தொடர்பான விபரம் | இந்த மீதிகள் 10 வருடங்களில் இருந்து காணப்பட்டு வருகின்ற மீதிகளாக உள்ளதுடன் இந்த மீதிகள் தொடர்பாக எமது கம்பெனியிடம் தகவல்கள் காணப்படவில்லை | பங்குச் சான்றிதழ் மற்றும் பங்குகளை விநியோகித்தல் தொடர்பான விபரம் உள்ளடக்கப்பட்ட கோப்புக்கள் பேணப்பட வேண்டும். |
| (ஏ) | ஒதுக்கங்கள் | 5,440,064 | மீள் மதிப்பீட்டு அறிக்கைகள் மீள் மதிப்பீட்டுக்குரிய தகவல்களை | இந்த மீதிகள் 10 வருடங்களில் இருந்து காணப்பட்டு வருகின்ற மீதிகளாக உள்ளதுடன் இந்த மீதிகள் தொடர்பாக எமது கம்பெனியிடம் தகவல்கள் காணப்படவில்லை. | மீள் மதிப்பீட்டுக்குரிய தகவல்களை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | செலுத்த வேண்டிய திரண்ட விருப்பு பங்குகளின் இலாப பங்குகள் | 5,339,059 | விருப்பு பங்குகளின் சான்றிதழ் இலாப பங்குகளை ஒதுக்குவதற்கான உரிய தகவல்கள் | இந்த மீதிகள் 10 வருடங்களில் இருந்து காணப்பட்டு வருகின்ற மீதிகளாக உள்ளதுடன் இந்த மீதிகள் தொடர்பாக எமது கம்பெனியிடம் தகவல்கள் காணப்படவில்லை. | மீதிகளை அடையாளப்படுத்தி தீர்வு காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஒ) | நலன்புரி ஒதுக்கம் | 950,265 | ஒதுக்கங்களை ஒதுக்கிடுவதற்கு உரிய பதிவேடுகள் மற்றும் கோப்புக்கள் | இந்த மீதிகள் 10 வருடங்களில் இருந்து காணப்பட்டு வருகின்ற மீதிகளாக உள்ளதுடன் இந்த மீதிகள் தொடர்பாக எமது கம்பெனியிடம் தகவல்கள் காணப்படவில்லை. | ஒழுக்கங்களை ஒதுக்கிடுவதற்கு உரிய விபரங்களை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஓ) | செலுத்த வேண்டிய மீதிகள் | 33,602,817 | மீதி உறுதிப்பாடு, கால பகுப்பாய்வு அறிக்கைகள் | இந்த மீதிகள் தொடர்ந்து காணப்படுகின்ற மீதியாகும்.இது பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து அங்கு எடுக்கப்படும் முடிவுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை மீதிகளை அடையாளப்படுத்தி தீர்வு காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 மார்ச் 31 ஆம் திகதி கம்பனியில் வியாபார செலுத்தப்பட வேண்டியவற்றுள் மீதி ரூபா 24,513,492 ஆனதுடன் அதில் ரூபா 21,314,781 தொகை 90 நாட்களை விச்சிய மீதியாக காணப்படுவதுடன் அந்த மீதியை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 20,858,087 தொகை தனியார் கம்பனி ஒன்றினால் கால்நடை உணவு கொள்வனவுக்காக செலுத்தப்பட வேண்டிய 2018 ஆம் வருடத்துக்கு முன்பிலிருந்து காணப்பட்டு வருகின்ற மீதி ஒன்றாகும். | தற்போது இந்த மீதிகளை செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மாதாந்தம் இந்த கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | செலுத்தப்பட்டு முடியாமல் காணப்படும் மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் பிரிவு 166 | கணக்கீட்டு வருடம் நிறைவடைந்து 06 மாதங்களின் பின்னர் கம்பெனி நடவடிக்கைகள் தொடர்பாக அந்த வருடத்திற்குரிய வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பெனியினால் அதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | எங்களுடைய கம்பெனியில் பணிப்பாளர் சபையொன்று நியமிக்கப்பட்டிருக்காததன் காரணமாக குறித்த தினத்தில் வருடாந்த கணக்குகளை சமர்ப்பிப்பதற்கு முடியாது போனது. எதிர்காலத்தில் இந்த கணக்குகளை சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தின் PED/12 ஆம் இலக்க சுற்றறிக்கை | | | |
| | (i) பிரிவு 3.1 மற்றும் 3.2 | கம்பனி நடவடிக்கைகளை செயல்படுத்தல் மற்றும் முகாமைத்துவம் மற்றும் செயற்பாட்டு மேற்பார்வைக்காக பணிப்பாளர் சபை ஒன்று நியமித்து இருக்க வேண்டிய போதிலும் கம்பெனியின் பணிகளை மேற்பார்வை செய்தல் மற்றும் செயல் | 2019 ஆம் வருடத்தின் பிற்பகுதியில் இருந்து இதுவரையும் பணிப்பாளர் சபை ஒன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அத்தோடு இதுவரை பணிப்பாளர் சபை கூட்டமும் நடத்தப்படவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பணிப்பாளர் சபையை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | படுத்துவதற்காக 2019 ஆம் வருடத்திற்கு பின்னர் பணிப்பாளர் சபை ஒன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) பிரிவு 5.1.3 | நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் தயாரிக்கப்பட்ட ஒருங்கினைந்த கூட்டுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2020/21 வருடங்கள் உள்ளடக்கப்பட்டு ஒருங்கினைந்த கூட்டுத் திட்டம் 2025 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையிலும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடைகள் வியாபார கம்பெனிக்கு 2019 ஆம் வருடத்தில் இருந்து இதுவரை பணிப்பாளர் சபை ஒன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை என்பதனால் கடந்த வருடங்களுற்கான ஒருங்கிணைந்த கூட்டு திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. எதிர்வரும் வருடத்திற்காக பணிப்பாளர் சபை ஒன்று நியமிக்கப்பட்டதன் பின்னர் ஒருங்கிணைந்த கூட்டு திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம், ஒருங்கினைந்த கூட்டுத் திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) பிரிவு 5.2.4 மற்றும் 5.2.5 | பணிப்பாளர் சபையினால் பாதிடு அங்கீகரிக்கப்பட்டு குறித்த மீதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்கள் குறையாத காலம் ஒன்றினுள் குறித்த அதிகாரிகளுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2020/2021 வருடங்களின் பாதிப்பு ஆவணங்கள் பணிப்பாளர் சபையினால் 2025 பிப்ரவரி 28 ஆம் திகதி வரை அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் வருடத்தின் பிற்பகுதியில் இருந்து இதுவரையும் பணிப்பாளர் சபை ஒன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் பாதிடு தயாரித்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்று சமர்ப்பிப்பதற்கு முடியாது போனது. | ஒவ்வொரு ஆண்டுக்கான பாதிட்டு ஆவணங்களை உரிய காலத்தினுள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) பிரிவு 6.5.1 | கணக்காண்டு நிறைவடைந்து 60 நாட்களினுள் வருடாந்த கணக்கறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2020/2021 மீதியாண்டுக்காக மீதி கூற்றுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது, 2024 செப்தெம்பர் 09 ஆம் திகதியான 38 மாதங்கள் தாமதத்தின் பின்னர் ஆகும். | பணிப்பாளர் சபை ஒன்று இல்லாததன் காரணமாக கணக்குகளை சமர்ப்பிப்பதற்கு தவறி விழுந்ததுடன் தற்போது விவசாய அமைப்பின் பேராளரின் அமைச்சின் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. | கணக்கறிக்கை உரிய காலத்தினுள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2014 பெப்ரவரி 17ஆம் திகதிய 01/2014 இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரிவு 5(II) | மீளாய்வாண்டுக்குரிய செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | செயல் நடவடிக்கை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் கம்பெனியின் பணிப்பாளர் சபை ஒன்று நியமிக்கப்படாததன் காரணமாக அங்கீகாரத்துடனான செயல் நடவடிக்கை திட்டம் ஒன்றை சமர்ப்பிப்பதற்கு முடியாது இருந்தது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம், வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | அரச பெறுகை வழிக்காட்டிகள் கோவை பிரிவு 4.2.1 | கம்பெனியினால் 2020 மற்றும் 2021 ஆகிய வருடங்களுக்காக பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | மகாவலி கால்நடைகள் வியாபார கம்பனிக்கு 2019 முதல் தற்போது வரை பணிப்பாளர் சபை ஒன்று நியமிக்கப்படாததன் காரணமாக பெறுகை திட்டம் ஒன்றை தயாரித்தல் மற்றும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளுதல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ள தவறியிருந்தது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம், பெறுகை திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (உ) | 1978 டிசம்பர் 19ஆம் திகதி திறைசேரி சுற்று நிருப இலக்கம் 842 | கம்பெனியினால் முறையான வகையில் நிலையான சொததுக்களின் பதிவேடு ஒன்றை பேணி இருக்கவில்லை என்பதனால் வருட இறுதி தினத்தில் முழுமையாக பெறுமானத் தேய்வு மேற்கொள்ளப்பட்டுள்ள சொத்துக்களை அடையாளப்படுத்திக் கொள்வதற்கு முடியாது இருந்தது. | கருத்துக்கள் கூறப்படவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 3,483,418 இலாபமொன்றாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 29,177,604 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 32,661,022 முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றதிற்கு விற்பனை வருமானம் அதிகரித்தல் மற்றும் விற்பனை கிரயம் மற்றும் நிர்வாக மற்றும் விநியோக செலவுகள் பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவுகள் விடயங்களின் முன்னேற்ற பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் கம்பெனியின் விற்பனை வருமானம் நூற்றுக்கு 14 இனால் அதிகரித்திருந்ததுடன் இதற்கு பிரதான காரணமாக இருந்தது முன்னைய வருடத்திற்கு இணையாக இனப்பெருக்க செயல்

திட்டத்தின் வருமானம் நூற்றுக்கு 39 இனால் அதிகரித்ததாகும். எவ்வாறு இருந்த போதிலும், பிராய்லர் செயற் திட்டத்தின் மற்றும் பன்றிகளை உருவாக்கும் செயல் திட்டத்தின் வருமானம் முன்னைய வருடத்துக்கு இணையாக முறையே நூற்றுக்கு 4 மற்றும் 59 ஆக குறைவடைந்து இருந்தது. முன்னைய வருடத்திற்கு இணையாக பண்ணைகளின் பயிரீட்டு வருமானம் நூற்றுக்கு 62 இனால் அதிகரித்திருந்ததுடன் ஏனைய வருமானங்கள் நூற்றுக்கு 100 இனால் குறைவடைந்திருந்தது.

மீளாய்வாண்டின் விற்பனை கிரயம் முன்னைய வருடத்திற்கு இணையாக நூற்றுக்கு 10 இனால் குறைந்து காணப்பட்டதுடன் இதற்கு இணையாக நிறுவன மற்றும் நிர்வாக செலவுகள் மற்றும் விநியோக செலவுகள் முன்னைய வருடத்திற்கு இணையாக முறையே நூற்றுக்கு 11 மற்றும் நூற்றுக்கு 18 ஆக குறைந்திருந்தது. இதன் காரணமாக நிறுவனத்தின் தேறிய இலாபம் நூற்றுக்கு 112 இனால் அதிகரித்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் நடைமுறை சொத்துக்கள் விகிதம், துரித சொத்துக்கள் விகிதம், மொத்த இலாப விகிதம், தேறிய இலாப விகிதம் முறையே 0.83 , 0.58 நூற்றுக்கு 15.5 மற்றும் 2.42 ஆக காணப்பட்டதுடன் முன்னைய வருடத்தின் அந்த விகிதங்கள் முறையே 0.77 , 0.55 மறை நூற்றுக்கு 7 மற்றும் மறை 23.11 ஆனது. அதன் பிரகாரம் இந்த விகிதங்களின் முன்னேற்றம் ஒன்று அவதானிக்கப்பட்டது. நடைமுறை சொத்துக்கள் விகிதம் மற்றும் துரித சொத்துக்கள் விகிதங்களின் முன்னேற்றம் ஒன்று காட்டப்பட்டிருந்த போதிலும் அந்த விகிதங்கள் உயர்ந்த மட்டத்தில் காணப்படவில்லை என்பதனால் தொழிற்படு மூலதன சிக்கலொன்றுக்கு முகம் கொடுக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது. மேலும் கம்பனியின் தேர்வு விகிதம் அவ்வாறெனில் மொத்த சொத்துக்கள் மற்றும் மொத்த பொறுப்புக்களை பார்க்கும் போது மொத்த சொத்துக்களும் விஞ்சப்பட்டு பொறுப்புக்கள் காணப்படுவதை அவதானிக்க முடிந்தது. முன்னைய வருடத்தின் மற்றும் மீளாய்வாண்டின் அந்த பெறுமதிகள் முறையே 1.18 மற்றும் 1.21 ஆகும். அதன் பிரகாரம் கம்பெனி நீண்ட கால பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்கு முடியாது இருந்ததன் அடிப்படையில் நீண்ட காலத்திலான வங்கலோத்துநிலை ஏற்பட்டுள்ளதை அவதானிக்கப்பட்டுள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மகாவலி கால்நடைகள் வியாபார கம்பெனியினால் பயன்படுத்தப்படும் மகாவலி அதிகார சபைக்கு உரித்தான ஹுருகஸ்வெவ விவசாய பண்ணை காணி உரித்தாக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அதற்காக குத்தகை உடன்படிக்கை ஒன்றும் காணப்படவில்லை. இந்த காணியின் நில அளவை நிச்சயமாக இதுவரை அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை என்பதுடன் விளைவற்று காணப்படுகின்ற நில அளவையும் நிச்சயமாக அடையாளப்படுத்த முடியாது உள்ளது. | கம்பெனியின் கால்நடைகள் உணவு தயாரிப்பதற்காக மகாவலி அதிகார சபையின் ஒரு கிராமத்தில் அமைந்துள்ள மகாவலி களஞ்சிய கட்டிட தொகுதியின் இரண்டு கட்டிடங்கள் வழங்கப்பட்டிருந்தது. இது குத்தகைக்கோ அல்லது உரித் தாக்கும் நடவடிக்கை ஒன்றல்ல என்பதுடன் இந்த நிறுவனம் மகாவலி அதிகார சபையின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வந்ததனால் ஏற்பட்ட ஒரு விளைவாகும். | சொத்துக்களை முறையாக உரித்தாக்கிக் கொள்வதற்கு மற்றும் ஆக்கபூர்வமாக உபயோகப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அனுராதபுரம் தம்புத்தேகம 26 ஏக்கர் உடைய மகாவலி கால்நடைகள் வியாபார கம்பனியின் அலுவலகம் அமைந்துள்ள விவசாய பண்ணை காணி மகாவலி அதிகார சபைக்கு உரித்தாவதுடன், காணி சம்பந்தமாக 1989 ஒக்டோபர் 03ஆம் திகதி முப்பது வருட குத்தகை ஒன்றுக்கு முற்பட்டிருந்தது. அதன் நிபந்தனையின் பிரகாரம், 2019 ஒக்டோபர் 02ஆம் திகதி குத்தகை கால எல்லை நிறைவடைந்திருந்தது. மேலும், கூட்டு மொத்தம் 31,099 சதுர அடி பரப்பளவு கட்டிடம் மற்றும் 46,924 சதுர அடி பரப்பளவு வியூகம் உள்ள பெறுமதி உள்ள நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த இந்த காணிக்கு உரிய உடன்படிக்கைகள் நாலதுவரை யாக்கப்படுவதற்கு செயற்பட்டிருக்க வில்லை. | வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடைகள் வியாபார கம்பெனி 30 வருடங்களின் குத்தகை அடிப்படை வந்ததுடன் 2019 செப்டம்பர் மாதம் 12 ஆம் திகதி அப்போது இந்த 30 வருட குத்தகைக்காலம் நிறைவடைந்திருந்தது. தற்போது இந்த கம்பெனி இந்த கம்பெனியை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கை சம்பந்தமாக இலங்கை மகாவலி அதிகார சபை மற்றும் வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடைகள் வியாபார கம்பெனிகளுக்கு இடையில் கலந்துரையாடல் இடம் பெற்று வருகின்றது. | புதிய ஒப்பந்தத்திற்கு முற்ப்படுதல் அல்லது முறையான உரித்தாக்களுக்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 2015 யூலை 16 ஆம் திகதிய அப/15/0940/631/018-I இலக்கமுடைய அமைச்சரவை தீர்மானம் மற்றும் தொடர்புடைய BD/RDS/124/CM/07 ஆம் இலக்க 2015 யூலை 08ஆம் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மீதி அமைச்சரின் அவதானத்தின் பிரகாரம் குறித்த சட்ட நடைமுறைகளின் கீழ் கம்பனியின் செயற்பாட்டு வினைத்திறனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அனைத்து வளங்கள், சொத்துக்கள், பங்குகள் மற்றும் முகாமைத்துவம் தேசிய கால்நடைகள் வளங்கள் அபிவிருத்தி சபைக்கு பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய துடன் 2017 ஆம் வருடத்தினுள் கம்பனியின் பங்குகளின் உரிமையில் நூற்றுக்கு 27 மாத்திரம் சபையிடம் காணப்பட்டது. எவ்வாறாயினும், இதுவரை அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டிருக்க வில்லை. | கம்பெனியின் பங்கு உரிமையில் 27% தேசிய கால்நடைகள் வள அபிவிருத்தி சபைக்கு உரியது. இந்த கையகப்படுத்தல் நடவடிக்கை சுயாதீனமாக எங்களுடைய கம்பெனியினால் தனியாக மேற்கொள்ள முடியாததுடன் இது தொடர்பாக 2015 ஆம் வருடத்தில் இருந்து இதுவரை கையகப்படுத்தல் ஏற்பாடுகள் முறையாக மேற்கொள்ளுதல் தொடர்பாக கோரிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கம்பெனியை கலைத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இதன் போது மகாவலி அதிகார சபைக்குரிய பங்குகளை கையகப்படுத்தல் தொடர்பாக இரு தரப்பினருடனும் உயர்மட்ட முகாமை த்துவத்துடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கையகப்படுத்தல்கள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |